

நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (21.06.2023) சென்னை, திருவான்மியூரில் அமைக்கப்பட்டு வரும் 230/33 கி.வோ. வளிம காப்பு துணை மின் நிலைய கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார். உடன், தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகத் தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன், இயக்குநர் (திட்டம்) எம்.இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (21.06.2023) தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை தலைமையிடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆணையாளர் (பொ) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர்கள் விஷு மஹாஜன், (வருவாய் (ம) நிதி), திருமதி ஷரண்யா அறி, (கல்வி), எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்திய வட்டாரம்), எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு வட்டாரம்) உட்பட பலர் உடனிருந்தனர்.

### திராவிடத்துத் தீரரான கலைஞருக்கு வீரவணக்கம்!

# திருவாரூரில் 'கலைஞர் கோட்டம்' - முதல்வருக்குப் பாராட்டு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன் 23 -

திராவிடத்துத் தீரர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூரும் வண்ணம் அவர் வாழ்ந்த ஊரில் "கலைஞர் கோட்டமும், கலைஞர் சிலையும்" திறக்கப்படுவது குறித்து பெருமகிழ்ச்சியோடு, நன்றி உணர்வுடன் வீர வணக்கம் செலுத்தும் வகையில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இன்று (20.6.2023) நமது சுயமரியாதைக்காரராக இறுதிவரை வாழ்ந்து, வரலாறு படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு தொடக்கத்தையொட்டி, அவர் பிறந்த மண்ணான திருவாரூரில் (காட்டூரில்) மிக்கப் பொருத்தமாக "கலைஞர் கோட்டம்" அமைக்கப்பட்டு திறக்கப்படுகிறது!

**திருவாரூர் – காட்டூரில் "கலைஞர் கோட்டம் திறப்பு!**

கலைஞரின் சிலை அவரால் பயிற்றுவிக்கப்பட்டு, 'திராவிட மாடல்' அரசின் மாண்பை இந்தியாவிற்கே பறைசாற்றி, எதேச்சதிகார ஆக்டோபஸ் கொடுங்கரங்களுக்குள் சிக்கவிடாமல் தடுக்கும் அரசியல் போர்ப் படைத் தளபதியான நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 20.6.2023 அன்று மாலை திறக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சமூகநீதிப் போராளி லாலுபிரசாத் அவர்களின் புதல்வரும், பீகாரின் நம்பிக்கை நட்சத்திரமும், துணை முதலமைச்சருமான தேஜஸ்வி அவர்களும் கலந்துகொண்டு விழா மாண்பினைப் பெருக்குகின்றனர்! இது திராவிடர் இயக்க வரலாற்றில் பொன்னேடு!

**கலைஞரின் நினைவைப் போற்றும் சின்னங்கள்!**

முதல் தொடக்கம் தலைநகர் சென்னையில் 7.6.2023 அன்று மக்கள் கடல் திரண்ட கூட்டணித் தலைவர்கள் பங்கேற்ற மாநாடும், அதில் முதலமைச்சர் விடுத்த அரசியல் ஏவுகணையும் எதிரிகளைக் குலைநடுங்கச் செய்தன! அதன்பின் ஒரு தலைசிறந்த பன்னோக்கு மருத்துவமனையை சென்னை கிண்டி பகுதியில் நமது முதலமைச்சர், கலைஞர் பெயரில் திறந்து வைத்தார்!

மதுரை மாநகரில் அறிவின் தேக்கமான அரிய நூலகமும் அவர் பெயரில் விரைவில் திறக்கப்படவிருக்கிறது! எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, கலைஞரின் நினைவிடத்தில் ஒரு புதுமைப் பொலிவும், அவரது பேனாவே அடையாளச் சின்னமாக கடலில் அமைவதை சிறிது தூரம் சென்று பார்த்து, அறிந்து, கற்றுத் திரும்புகின்ற ஓர் ஏற்பாடு, சென்னை நகரத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவில் எங்குமில்லாத அமைதிப் புரட்சிக்கு அடித்தளமிடவிருக்கிறது அந்தப் பறிக்கப்பட முடியாத பேனாவின் எழுத்துகள்!

**தந்தை பெரியாரே கலைஞருக்குச் சிலை திறக்கச் சொன்னது சாதாரணமா?**

வாளைவிட வலியதான பேனாவின் வலிமையைக் காட்டியவர். அவரது அமைதியின் தொடர்ச்சியை, அழகின் சிரிப்பைப் புலப் படுத்தும் அந்த பேனா நினைவுச் சின்னம் அந்த வங்கக் கடலில் தங்கமாய் தகத்தகாய ஒளிர்விடும். இப்படிப்பட்ட பல சிறப்புகள் கலைஞர் என்ற உழைப்பின் உருவமாம், பல்திறன் கொள்கலான அவருக்கு மட்டும் பெருமை சேர்ப்பன அல்ல; அதையும் தாண்டி அவர் கொண்ட சுயமரியாதை பகுத்தறிவு திராவிடக் கொள்கை வெற்றியை திக்கெட்டும் முரசொலித்து முழங்குவது சாதனைக்கான சாதனை! சரித்திரப் போதனைக்கான நல்லதோர் வாய்ப்பு காட்சியும், கருத்தும் எவரும் பெறலாம்!

மற்ற பல தலைவர்களுக்குக் கிட்டாத பெருமை, எட்டாத புகழ் நமது நூற்றாண்டு விழா நாயகர் கலைஞருக்கு எது தெரியுமா? பகுத்தறிவுப் பலகவன், சுயமரியாதை இயக்கங்கண்ட அந்த சூரியன், இந்த உதய சூரியன் இளந்தலைவருக்கு அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோதே தனிச் சிலையை சென்னையில் நிறுவ வலுவான வாதங்களை இன எதிரிகளின் வாயடைத்து வைக்க முன்மொழிந்தார் தந்தை பெரியார்!

இந்தப் பொன்னான வாய்ப்பு எவருக்குக் கிடைக்கும்? கலைஞர் அப்போது மறுத்தார் தந்தைக்கு நன்றி கூறினார். பிறகு 1971 இல் மகத்தான வெற்றியை தேர்தலில் பெற்று (184 இடங்களில்) மீண்டும் கலைஞருக்கு சென்னையில் சிலை வைக்க குழு அமைத்தார். அப்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார் தந்தை பெரியார்!

கலைஞருக்கு சிலை வைக்க, அன்னை மணியம்மையார் முயன்றபோது, சென்னையில் அய்யாவுக்குத் தி.மு.க. சிலை வைத்த பிறகு, செய்யலாம் என்று கூறி, அதைத் தடுத்தார். கலைஞர்! சொன்னபடியே தந்தை பெரியார் சிலையை சென்னை அண்ணா சாலையில் தி.மு.க. திறந்தது. பிறகு, திராவிடர் கழகம் அன்னை மணியம்மையார் தலைமையில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் முன்னிலையில், அண்ணாசாலையில், கலைஞரின் சிலை திராவிடர் கழகத்தால் திறக்கப்பட்டது 1975 ஆம் ஆண்டு!

**வீர வணக்கம் செலுத்தி, நன்றி கூர்வோம்!**

இப்படி அவரது சிலைக்கே ஒரு நீண்ட வரலாறு உண்டு. இன்று அவர் பிறந்த மண்ணில் அந்த அரிய மாமனிதரை திராவிடத்துத் தீரரை நன்றியோடு நினைவு கூர்ந்து, திராவிட ஆட்சியின் மாட்சியை மீட்சியாக்கி "தலைவரே உங்களுக்கு எங்கள் வீர வணக்கம் நன்றியோடு" என்று முழங்குகிறோம்!

வாழ்க கலைஞர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழினத் தலைவர் தமிழகத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா :

# சவுதி அயலக அணி ரியாத் பகுதி சார்பாக மருத்துவ முகாம்!

ரியாத், ஜூன் 23 -

தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சவுதி தி.மு.கவின் அயலக அணி மத்திய மண்டலம் ரியாத் பகுதி சார்பாக தமிழ் பேசும் மக்களுக்காக, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் மாபெரும் இலவச மருத்துவ முகாம் 16.06.2023 சிறப்பாக நடந்தது.

தமிழகத்தைச் சார்ந்த Al Ryan International Polyclinic மருத்துவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.... Internist மருத்துவராக பணியாற்றும் டாக்டர் கார்த்திகேயன், மகப்பேறு மற்றும் மகளிர் சிறப்பு மருத்துவராக பணியாற்றி வரும் டாக்டர் ஆஷா கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பான முறையில் மருத்துவ ஆலோசனைகள் வழங்கினார்கள்.

இந்த மருத்துவ முகாமில், உடல் பருமன் தொடர்பான பரிசோதனைகள், இரத்த அழுத்த பரிசோதனை, நீரிழிவு நோய் பரிசோதனை, இரத்தக் கொழுப்பு பரிசோதனை, சிறுநீரகப் பரிசோதனை, பல் மருத்துவ பரிசோதனை, மகப்பேறு மற்றும் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பொது மருத்துவம் சார்ந்த பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது..

N.R.T.I.A நடத்தும் இந்த நிகழ்வின் புரவலர்களாக Breeze Medcare, Universal Inspection Company, SAT Cargo , PRENISS International Pvt Ltr, மதுரை மெட்ரோ கஃபே பத்தாஹ், வெல்கம் கஃபே பத்தாஹ் ஆகியோர் இடம் பெற்று சிறப்பித்தனர்.

முழு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் குறிப்பாக மருத்துவர்களுக்கும் மருத்துமனை நிர்வாகிகளுக்கும் மருத்துவமனையில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் (NRTIA) அமைப்பின்உறுப்பினர்களுக்கும் இதர தோழமை இயக்கங்களுக்கும் NRTIAசவுதி துணை அமைப்பாளர் டாக்டர்.சந்தோஷ் நன்றி தெரிவித்தார்.



திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் பகுதியில் சுற்றுலா மையம் அமையும் இடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி., திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ., நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் உள்ளனர்.


